**மே – 13**

# TNPSC துளிகள்

- இந்தியாவின் முதல் பட்டியலிடப்பட்ட, அகமதாபாத்தைச் சேர்ந்த வணிக நிறுவனமான இன்பைபீம் (Infibeam), மேக அடிப்படையிலான சரக்கு மேலாண்மை நிறுவனமான (Cloud-based inventory management company) யுனிகாமர்ஸை வாங்க உள்ளது. இன்பைபீம், விருப்பமான மாற்றக்கூடிய கடன் பத்திரங்களின் (Optional convertible debentures - OCD) முன்னுரிமைகளை ஸ்நாப்டீலுக்கு வழங்கும்.
    - யுனிகாமர்ஸ் நிறுவனமானது ஸ்நாப்டீல் நிறுவனத்தால் முழுவதும் உரிமை கொள்ளப்பட்ட துணை நிறுவனம் ஆகும்
- இந்திய ஆயில் நிறுவனத்திற்குப் பிறகு, மத்திய அரசால் உரிமை கொள்ளப்பட்ட இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட், வீட்டிற்கே சென்று டீசலை வழங்கும் முறையை மும்பையில் தொடங்கியுள்ளது. அதோடு, இத்திட்டத்தை நாட்டின் பிற பகுதிகளிலும் விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது.
- வங்கதேசம், இஸ்லாமிய கூட்டுறவிற்கான நிறுவனத்தின் (Organisation of Islamic Cooperation – OIC) சாசனத்தை மறுகட்டமைப்பு செய்வதற்கு முன்மொழிந்துள்ளது. இந்த மறுகட்டமைப்பானது, இந்தியா போன்ற இஸ்லாமியர் பெரும்பான்மையல்லாத நாடுகளை (Non-Muslim countries) பார்வையாளர் பட்டியலில் இணைப்பதற்கு வழியமைத்துத் தரும்.
    - OIC என்பது, 57 உறுப்பினர்களைக் கொண்டது. இந்த 57 உறுப்பினர்களும் இஸ்லாமியர் பெரும்பான்மை நாடுகளாகும். OIC –யின் அதிகாரப்பூர்வ மொழிகள்: அரேபியம், ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு ஆகும்.
- TRA-வின் வியாபாரக்குறி நம்பிக்கை அறிக்கை 2018-ன் படி பதஞ்சலி ஆயுர்வேத நிறுவனமானது இந்தியாவின் மிகவும் வேகமாக வளரும் நுகர்வோர் பொருட்களின் குறி (Brand) எனத் தரவரிசையிடப்பட்டுள்ளது.
- பாரத் எனும் 6 நாள் விழாவை புது தில்லி நடத்த உள்ளது. மாட்சிமையுடைய மற்றும் தொன்மையான இந்திய நாகரிகத்தின் 21-ஆம் நூற்றாண்டின் பாராட்டுரைகள் (Tributes) எனக் கருதப்படும் இந்த நிகழ்ச்சி கலைகளுக்கான இந்திரா காந்தி தேசிய மையத்தில் நடைபெறும்.
- மாஸ்கோவிலுள்ள ஆர்ரேட் கிரம்ளின் அரங்கத்தில் நடைபெற்ற பதவியேற்பு நிகழ்ச்சியில் திரு. விளாமிடிர் புதின் ரஷ்யாவின் அதிபராக பதவியேற்றுக் கொண்டார். இது புதினின் 4-வது ஆட்சிக் காலமாகும்.அதிபராக பதவியேற்ற பிறகு, 2012-லிருந்து பிரதமர் பதவியை வகித்து வந்த டிமிட்ரி மெட்வெடெவ்வை புதின் பிரதமராக அறிவித்துள்ளார்.
- கொல்கத்தாவிலுள்ள நந்தன் திரைப்பட மற்றும் கலாச்சார மையத்தில் திரைப்பட விழாவை ஜூலை 2018-ல் சீனா நடத்தும் என சீனமக்கள் குடியரசிற்கான துணைத் தூதர் (Counsel General) திரு. மா ஜான்வு தெரிவித்துள்ளார்.
- 30-வது கடற்படை உயர் கட்டளை பயிற்சிக்கான நிறைவு விழா வெரெத்திலுள்ள (Verem) INS மன்தோவி எனும் கடற்படை போர் பயிற்சி கல்லூரியில் நடைபெற்றது.
    - கடற்படை போர் பயிற்சி என்பது இந்தியக் கடற்படையின் முன்னணி பயிற்சி நிறுவனம் மற்றும் இந்திய ஆயுதப்படைப் பிரிவின் மூன்று போர் பயிற்சிக் கல்லூரிகளில் ஒன்றாகும்.

# சர்வதேசச் செய்திகள்

## பாலிகட்டான் இராணுவப் பயிற்சி

- அமெரிக்கா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய இருநாடுகளும் 34-வது மிகப்பெரிய வருடாந்திர இருதரப்பு இராணுவப் பயிற்சியான பாலிகட்டானைத் தொடங்கியுள்ளன. பாலிகட்டான் எனும் பிலிப்பைன் வார்த்தைக்கு "புயம் முதல் புயம்" (Shoulder to Shoulder) அல்லது ஒருவருக்கொருவர் சுமைகளை பரிமாறிக் கொள்ளுதல் என்று பொருள்.



- ஆஸ்திரேலியாவும், ஜப்பானும் இந்தப் பயிற்சியில் கூர்நோக்கு நாடுகளாக இணைந்துள்ளன.
- இந்த பயிற்சி பரஸ்பர பாதுகாப்பு, பயங்கரவாத எதிர்ப்பு, மானுட உதவி மற்றும் பேரிடர் மீட்பு உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் மீது கவனம் செலுத்தும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## செயற்கை நுண்ணறிவை பயன்படுத்திய துல்லிய வேளாண்மை

- நிதி ஆயோக் மற்றும் ஐ.பி.எம். நிறுவனம் ஆகியவை உயர் லட்சிய மாவட்டங்களிலுள்ள விவசாயிகளுக்கு உண்மை நேர ஆலோசனையை வழங்குவதற்கு செயற்கை நுண்ணறிவை பயன்படுத்திய பயிர் சாகுபடி கணிப்பு மாதிரியை உருவாக்குவதற்கான நோக்க அறிக்கையில் (Statement of Intent – SoI) கையெழுத்திட்டுள்ளன.
- இத்திட்டத்தின் முதல் கட்டமானது அஸ்ஸாம், பீகார், ஜார்கண்ட், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ராஜஸ்தான் மற்றும் உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலுள்ள 10 உயர் லட்சிய மாவட்டங்களுக்கு இந்த மாதிரியை உருவாக்குவதன் மீது கவனம் செலுத்தும்.
- இந்தத் திட்டத்தின் நோக்கமானது மேம்படுத்தப்பட்ட செயற்கை நுண்ணறிவு புத்தாக்கங்களின் அடிப்படையிலான பூச்சி/நோய் பரவலின் முன்கூட்டிய

எச்சரிக்கை, பயிர் கண்காணிப்பை அடையாளம் காணும் அமைப்பு, வானிலையை அறியும் ஆற்றல் கொண்ட வேளாண் தொழில்நுட்பம் ஆகியவற்றை அறிமுகப்படுத்துதல் ஆகும். மேலும் அவற்றை, வேளாண் மக்களுக்குக் கிடைக்கச் செய்தலையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது .

## தட்கன்

- ரூர்கியிலுள்ள இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தைச் சேர்ந்த அறிஞர்கள், தட்கன் எனும் கைப்பேசி செயலியை உருவாக்கியுள்ளனர். இந்த செயலியானது இதய செயலிழப்பால் பாதிக்கப்பட்ட நோயாளிகளை தொலை தூரத்திலிருந்து கண்காணிப்பதுடன் அவர்களுக்கு மருத்துவ ரீதியிலான உதவிகளையும் வழங்குகிறது.
- நோயாளிகளின் உடல்நலத் தரவுகளில் (Health Datas) ஏதேனும் கடுமையான மாற்றங்கள் ஏற்படுமேயானால் இந்த செயலி அதனை உடனடியாக மருத்துவர் மற்றும் நோயாளிக்குத் தெரிவிக்கிறது. இந்த கடுமையான மாற்றங்களானது மாரடைப்பு உடனடியாக ஏற்படுவதற்கான வாய்ப்புகளை குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- இந்த கைப்பேசி செயலியானது, ரூர்கியிலுள்ள இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தின் வல்லுநர்களால் மருத்துவ அறிவியலுக்கான அனைத்திந்திய நிறுவனத்தின் (AIIMS) வல்லுநர்களோடு கூட்டிணைந்து வடிவமைக்கப்பட்டது.

## அப்ஸ்டார் -6C

- சீனா, அப்ஸ்டார்-6C எனும் புதிய தொலைத்தொடர்பு விண்கலத்தை புவியின் சுற்றுவட்டப் பாதையில் வெற்றிகரமாக செலுத்தியுள்ளது.
- இந்த விண்கலம், லாங் மார்ச்-3B ராக்கெட் மூலம் ஸிசாங் விண்வெளி ஏவு மையத்திலிருந்து ஏவப்பட்டது.
- அப்ஸ்டார்-6C விண்கலத்தின் பயன்பாட்டாளர் ஹாங்காங்கைச் சேர்ந்த APT விண்வெளி நிறுவனம் ஆகும்.
- இந்த விண்கலமானது தொலைக்காட்சி ஒளிபரப்பு, இணைய வசதி, தொலைத்தொடர்பு மற்றும் பல்லூடக சேவைகள் ஆகியவற்றை ஆசிய-பசிபிக் பகுதிகளிலுள்ள வாடிக்கையாளர்களுக்கு வழங்கும்.
- இந்த விண்கலமானது, லாங் மார்ச் ராக்கெட் வரிசையின் 273-வது திட்டமாகும். இதன் விண்கலமும், ராக்கெட்டும் சீன ஏரோஸ்பேஸ் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழகத்தால் உருவாக்கப்பட்டது.



## டிஜிட்டல் இந்தியா பயிற்சியளிப்பு திட்ட தளம்

- இளைஞர்களின் திறன்களை மேம்படுத்தும் ஒரு முயற்சியாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் டிஜிட்டல் இந்தியா பயிற்சியளிப்பு திட்டதளத்தை தொடங்கியுள்ளது.
- இந்தத் தளம் மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் திரு. இரவி சங்கர் பிரசாத் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.
- மாணவர்கள், ஆன்லைன் மூலமாக பயிற்சி பெறுவதற்கு விண்ணப்பிப்பதற்கான வசதியை இத்தளம் ஏற்படுத்தித் தரும். இந்தப் பயிற்சியில் மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.10,000 ஊதியத் தொகையாக வழங்கப்படும்.

## செம்மறி ஆடுகளில் விந்தணு செலுத்தல்களின் புதிய முறை

- ராஜஸ்தான் மாநிலத்தின் அவிகாநகரில் அமைந்துள்ள மத்திய செம்மறி ஆடுகள் மற்றும் கம்பளி ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிஞர்கள் செம்மறி ஆடுகளின் இனப்பெருக்கத்திறகு புதிய லாப்ராஸ்கோப் உதவியுடனான விந்தணு செலுத்தல் முறையைக் கண்டறிந்துள்ளனர்.
- இந்த முறையானது சிறு கீறல் மூலமாக அடிவயிற்றுக்குள் கடினமான கண்ணாடி இழையிலான லாப்ராஸ்கோப்பை செலுத்தும் சிறிய ஊடுறுவல் தன்மை கொண்ட லாப்ராஸ்கோப் முறையாகும்.
- இதன் உதவியுடன் கேமரா மூலம் செம்மறி ஆட்டின் இனப்பெருக்க பாதை குறிக்கப்பட்டு உறைந்த நிலையிலுள்ள விந்தணு கருப்பையில் செலுத்தப்படுகிறது.
- இவ்வாறு பிறக்கும் செம்மறி ஆட்டுக் குட்டிகள் நீடித்த வாழ்வை (Survival) 60% வரை அடைய இந்த புதிய முறை உதவுகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## தீங்கு விளைவிக்கக்கூடிய ஆல்கேயின் வளர்ச்சி

- புவி வெப்பமயமாதல் ஆனது நாக்டிலியூகா ஆல்கேயின் (Noctiluca Algae) பெருக்கத்திற்கு வழிவகுப்பதாக ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். கடல் ஓசை (Sea Tinkle) எனவும் அழைக்கப்படும் இந்த ஆல்கேயானது அரபிக்கடலில் காணப்படும் தீங்கு விளைவிக்கக்கூடிய ஆல்கே ஆகும். இந்த ஆல்கேதான் மும்பை கடற்கரையின் நிறம் கருப்பாக மாறுவதற்கான காரணம் ஆகும்.
- இது தொடர்பான ஆய்வு, மத்திய புவி அறிவியல் (Ministry Earth Science) அமைச்சகத்தின் அங்கமான பெருங்கடல் தகவல் சேவைகளுக்கான இந்தியாவின் தேசிய மையம், அமெரிக்காவின் தேசிய கடல் மற்றும் வளிமண்டல நிர்வாக அமைப்பு ஆகியவற்றின் அறிஞர்களால் மேற்கொள்ளப்பட்டது.
- கடல் பொறி எனவும் நாக்டிலியூகா ஆல்கே அழைக்கப்படுகிறது. இந்த ஆல்கே, டையோடம் எனப்படும் மீன் உணவுச் சங்கிலியின் அடித்தளத்தில் காணப்படுகின்ற முக்கிய பிளாங்க்டான் உயிரினங்களை அழிக்கும் ஒரு பல்லுருவி ஆகும்.
- இந்த ஆல்கே அதிக அளவிலான அம்மோனியாவை (கழிவுகள்) வெளியிடுகின்றன. இந்த அம்மோனியா அதிக அளவிலான மீன்கள் இறப்பதற்குக் காரணமாக அமைகின்றது.
- கடுமையான புவி வெப்பமயமாதல் இந்த ஆல்கேக்களின் பெருக்கத்திற்கு வழிவகுக்கும். ஆல்கேக்களின் இந்தப் பெருக்கம் மீன்களின் உணவுச் சங்கிலிகளை பாதிப்படையச் செய்வதோடு மீன்வளம் இந்தப் பகுதியில் குறையவும் வழிவகுக்கிறது.



# மாநிலச் செய்திகள்

## TOONZ அனிமேஷன் வல்லுநர்கள் மாநாடு – 2018

- TOONZ அனிமேஷன் வல்லுநர்கள் மாநாடு – 2018-ன் 19-வது பதிப்பு கேரள மாநிலத்தின் திருவனந்தபுரத்தில் நடைபெற்றது.
- இம்மாநாடு அனிமேஷன், காட்சி விளைவுகள் (Visual Effects), கேமிங் (Gaming) மற்றும் நகைச்சுவை மன்றம் (Comics Forum) ஆகியவற்றிற்கான பிக்கி (FICCI) அமைப்பின் தலைவரான ஆஷிஷ் குல்கர்னியால் தொடங்கி வைக்கப்பட்டது. இம்மாநாடு தொழில்நுட்பப் பூங்காவான (Technopark-based) TOONZ ஊடகக் குழுவால் நடத்தப்பட்டது.
- இந்திய அனிமேஷன் துறையின் முன்னோடியும், அனிமேஷனில் ஹனுமானை உருவாக்கியவருமான திரு. V.G. சமந்த் அவர்கள் அனிமேஷன் துறையில் தன்னுடைய பங்களிப்பிற்காக அனிமேஷனின் பிரபலமானவர் (Legend of Animation) என்ற விருது வழங்கப்பட்டு கவுரவிக்கப்பட்டார்.

## தேசிய பயணிகள் விடுதி நிலையங்கள்- அழகாக்குதல் போட்டி

- மகாராஷ்டிராவிலுள்ள பல்லார்ஷா மற்றும் சந்திரபூர் ஆகிய ரயில் நிலையங்கள் தேசிய பயணிகள் விடுதி நிலையங்கள் அழகாக்குதல் போட்டியில் வெற்றி பெற்று முதலிடம் பிடித்துள்ளன.



- தடோபா தேசியப் பூங்காவிலுள்ள வனவிலங்குகள் மற்றும் உள்ளூர் பழங்குடியின கலைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஓவியங்கள், சிற்பங்கள் மற்றும் சுவரோவியங்கள் ஆகியவற்றால் மத்திய இரயில்வேயின் நாக்பூர் மண்டலம் தன்னுடைய மேற்கண்ட இரு ரயில் நிலையங்களையும் அழகுபடுத்தியுள்ளது.
- இரண்டாம் இடத்தை பீகார் மாநிலத்தின் மதுபானி ரயில் நிலையம், தமிழ்நாட்டின்

மதுரை ரயில் நிலையம் ஆகியவை பெற்றுள்ளன. இவ்விரு ரயில் நிலையங்களும் தங்களுடைய உள்ளூர் கலாச்சாரத்தின் பிரபலமான காட்சிகளை சித்தரித்துள்ளன.

- மூன்றாம் பரிசு, மூன்று ரயில் நிலையங்களுக்கு கூட்டாக வழங்கப்பட்டுள்ளது.
- அவையாவன :
  - குஜராத்தின் காந்திதம்
  - ராஜஸ்தானின் கோட்டா
  - தெலுங்கானாவின் செகந்திராபாத்

# பிரபலமானவர்கள் , விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## ONV – இலக்கிய பரிசு

- ஞானபீட விருதை வென்றவரான M.T. வாசுதேவன் நாயர் தன்னுடைய மலையாள இலக்கியத்திற்கான பங்களிப்பிற்காக இந்த ஆண்டிற்கான வருடாந்திர ONV இலக்கிய விருது வழங்கி கவுரவிக்கப்பட்டுள்ளார்.
- ONV இலக்கிய பரிசானது, ONV கலாச்சார நிறுவனத்தால் மறைந்த கவிஞர் ONV குருப்பின் (ONV Kurup) நினைவாக ஆரம்பிக்கப்பட்டது.
- இந்த விருது ரூ. 3 லட்சம், சான்றிதழ், கவுரவ மாலை (plaque) ஆகியவற்றை உள்ளடக்கியது.
- இவ்விருதுக்கு நபர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு தேர்வுக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்தத் தேர்வுக் குழுவினால் திரு. நாயர் இவ்விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இந்தத் தேர்வுக் குழுவானது, திரு. M.M. பாஸ்கர் அவர்களைத் தலைவராகவும், முன்னாள் மலையாளப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரான திரு. K. ஜெயக்குமார் மற்றும் கவிஞர் பிரபா வெர்மா ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டது.
- மேலும் அனுஜா அகாதூத் அவர்களின் கவிதைத் தொகுப்பான “அம்மா உரங்குன்னில்லா” என்ற நூல் இளம் எழுத்தாளர் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.



# இதரச் செய்திகள்

## பரபரப்பான சர்வதேச வான்வழி

- வான்வழிப் போக்குவரத்து நுண்ணறிவு நிறுவனமான OAG-யின் ஆய்வின்படி, சிங்கப்பூர் மற்றும் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரை இணைக்கும் வான்வழிப் பாதையானது உலகின் பரபரப்பான சர்வதேச வான்வழிப் பாதையாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- பிரிட்டனைச் சேர்ந்த OAG-யின் ஆய்வின்படி, உலகின் 20 பரபரப்பான சர்வதேச வான்வழிகளில் ஆசியா பெரும்பான்மை வகிக்கிறது. இதில் 14 வான் போக்குவரத்து வழிகள் (தொடக்கம் மற்றும் அடைவு - Starting and Destinaton) ஆசியாவிற்குள்ளேயே உள்ளன.
- சிங்கப்பூரின் ஜகார்தாவைத் (27,304 விமானங்கள்) தொடர்ந்து உலகின் இரண்டாவது பரபரப்பான சர்வதேச வான்வழியாக ஹாங்காங் மற்றும் தைவான் தலைநகரான டெய்ப்பி (பிப்ரவரி வரையில் 28,887 விமானங்கள்) இடையேயான வான்வழிப் பாதை உள்ளது.

- - - - - - - - - - - - - - -